உ

சிவமயம்.

திருக்குற்றாலக்குறவஞ்சி.

இஃது.

மணிமங்கலம்

வடிவேலுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்.

P. N. C. கடைகாரியம்,

N. குருசாமிநாயுடு அவர்களால்

பிடாரித்தாங்கல்,

நாராயணசாமிமுதலியார் குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

வித்தியாரத்நாகரஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1903.

சென்னைபிரம்பூர்குயப்பேட்டை 65 வது, நெம்பர்வீடு.

கடவுள் துணை.

விளம்பரம்.

கனவான்களே ! சென்னை பிரம்பூர் குயப்பேட்டை படவெட்டம்மன் கோவில் தெருவு 64-வது நெம்பருடைய வித்தியாரத்தினாகர அச்சுக்கூடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட வி-பி கம்பெனியில் தமிழ், தெலுங்கு, கிரந்தம், துலுக்குமுதலிய புஸ்தகங்களும் ஸ்மார்த்த வைஷ்ணவர்களுக்கு வேண்டும் புஸ்தகங்களும் பால்யாகளுக்கு வேண்டும் காலேஜிப் புஸ்தகங்களும் உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டும் ஆக்டுபுஸ்தகங்களும், இசுலாமானவர்களுக்கு வேண்டும் தமிழ் எழுத்தில் துலுக்குபுஸ்தகங்களும், காவலர், பாவலர், நாவலர் யாவருக்கும் வேண்டும் இலக்கணம், இலக்கியம், புராணம், கதை, அம்மானை, நாடகம், விலாசம், கீர்த்தனை, அந்தாதி, கலம்பகம், கோவை, தூது, வெண்பா, சதகம், கும்மியெனும் அனேகம் தினுசுகளும், அத்வைத சாஸ்திரமும், ஆறுமுகநாவலர் புஷ்பரத செட்டியார் சை-இரத்தினசெட்டியார் இவர்களுடைய அச்சுக்கூடங்களிற் பதிப்பித்த உயர்ந்த புஸ்தகங்களும், வியாதிகள் சொஸ்தப்படும்படி தக்கஅவிழ்தங்களும், அவரவர் பேர்களுக்குத் தக்க தாய் ரொம்பவும் அழகான வேலைசெய்த ரப்பர் சீல்களும், ஜெர்மன் சில்வரால் செய்தநகைகளும் சாமான்களும், நல்ல வாசனை பொருந்தியதாயும் நாள்படயிருந்தால் கெடாமலிருக்கும்படியாயும், உள்ள அத்தர் தினுசுகளும், பூசு பில்லைகளும், வாசனை வத்திகளும் இவைகளெல்லாம் தயாரா யிருப்பதால் வேண்டியவர்கள் அடியிற்கண்ட எனது மேல் விலாசத்திற்கு எழுதினால் உடனே வி-பி தபாலில் அனுப்பக்கூடும் என்னுடைய கேட்லாக்கு வேண்டுமானால் அரையணு ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

ஒவ்வொருவரும் எங்களுக்கு விஷயந் தெரியும்படி தெளிவாய் ஒவ்வொரு முறையிலுந் தங்கள் பெயர் ஊர், இருப்பிடம், போஸ்டாபீஸ், தாலுக்கா, ஜில்லா முதலியவைகளோடே விலாசத்தை கட்டாய மெழுதவேண்டும்.

வித்தியாரத்திநாகர அச்சுக்கூடத்தலைவர்
பெரம்பூர்போஸ்டுமெதராஸ்.
☞ பி. நா. சிதம்பரமுதலியார்.

உ

சிவமயம்.

திருக்குற்றாலக் குறவஞ்சி.

விநாயகர்-துதி.

ஆசிரியவிருத்தம்.

பூமலியிதழிமாலை புனைந்தகுற்றாலத்தீசர்
கோமலர்ப்பாதம்போற்றிக் குறவஞ்சித்தமிழைப்பாட
மாமதத்தருவிபாயு மலையெனவளர்ந்தமேனி
காமலிதருப்போலைந்து கைவலான்காவலாமே.

சுப்பிரமணியக்கடவுள்-துதி.

ஆசிரியவிருத்தம்.

பன்னிருகைவேல்வாங்கப்பதினொருவர்படைதாங்கப்பத்துதிக்கும்
நன்னவ்வீரரும்புகழமலைகளெட்டுங்கடலேழுநாடியாடப் (றாய்
பொன்னின்முடிபாறேந்தியஞ்சுதலையெனக்கொழித்துப்புயநான்மூன்
தன்னிருதாடருமொருவன்குற்றாலக்குறவஞ்சித்தமிழ்தந்தானே.

திரிகூடநாதர்துதி-ஆசிரியவிருத்தம்.

கிளைகளாய்க்கிளைத்தபலாக்கொம்பெலாஞ்சதுர்வேதக்கிளைகளீன்ற
களையெலாஞ்சிவலிங்கங்கனியெலாஞ்சிவலிங்கங்கனிகளீன்ற
களையெலாஞ்சிவலிங்கம்வித்தெலாஞ்சிவலிங்கச்சொரூபமாக (வோமே
விளையுமொருகுறும்பலவின் முளைத்தெழுந்தசிவக்கொழுந்தைவேண்டு

குழல்வாய்மொழியம்மைதுதி-ஆசிரியவிருத்தம்.

தவளமதிதவழ்குடுமிப்பனிவரையின்முளைத்தெழுந்துகதைசேர்முக்க
பவளமலைதனிலாசைபடர்ந்தேறிக்கொழுந்துவிட்டுப்பருவமாகி
யவிழுநறைப்பூங்கடப்பந்தாமரையுமீன்றொருநகேட்டாம்பலீன்று
குவலயம்பூக்கருள்கொடியைக்கோதைகுழல்வாய்மொழியைகூறுவோம்

மூவர்துதி-ஆசிரியவிருத்தம்.

தலையிலேயாறிருக்கமாமிக்காகத் தாங்குகடலேழமைத்ததிருக்குற்றாலர், சிலையிலேதடிக்கடம்புயத்தைவாழ்த்திச் செழித்தகுறவஞ்சிநாடகத்தைப்பாட, வளையிலேமலைமிதக்கவேறிணுணு மத்தியிலேபூவையங்காளழைப்பித்தானுங், கலையிலேகிடைத்தபொருளாற்றிற்போட்டுக்களைருவக்கிலெடுத்தானுங்காப்பதாமே.

அகத்தியர்வாதவூரர்துதி-ஆசிரியவிருத்தம்.

சித்தர்திரிகூடலிங்கர்குறவஞ்சிநாடகத்தைநிகழ்த்தவேண்டி
முத்தர்திருமேனியெல்லாமுருகவேள்தமிழுரைத்தமுனியைப்பாடி
இத்தரையிலாத்துமாவிட்டிறக்குநாட் சிலேட்டுமம்வந்தேறுவண்ணம்
பித்தனடிதுணைசேர்ந்தவாதவூரானடிகள்பேணுவோமே.

சரஸ்வதிதுதி ஆசிரியவிருத்தம்.

அடியிணைமலருஞ்செவ்வா யாம்பலுஞ்சிவப்பினாளை
நெடியபூங்குழலுமைக்க ணீலமுற்கறுப்பினாளைப்
படிவமும்புகழுஞ்செங்கைப் படிகமும்போல்வெளுப்பினாளைக்
கொடிதனைத்திருக்குற்றாலக் குறவஞ்சிக்கியம்புவோமே,

நூற்பயன்-ஆசிரியவிருத்தம்.

சிலைபெரியவேடனுக்குநரிக்கும்வேதச் செல்வருக்குந்தேவருக்கு மிரக்கிமேனாட், கொலைகளவுகட்காமங்குருத்துரோகங் கொடியபஞ்ச பாதகமுந்தீர்த்ததாலே, நிலவணிவார்குற்றாலநினைத்தபேர்கணினைத்த வரம்பெறுவரதுநினைக்கவேண்டிப், பலவளஞ்சேர்குறவஞ்சிநாடகத் தைப்படிப்பவர்க்குங்கேட்பவர்க்கும்பலனுண்டாமே.

அவையடக்கம்-ஆசிரியவிருத்தம்.

தாரினைவிருப்பமாகத் தலைதனில்முடிக்குந்தோறும்
நாரினைப்பொல்லாதென்றே ஞாலத்தோர்தள்ளுவாரோ
சீரியதமிழ்மாலைக்குட்செல்வர்குற்றாலநாதர்
பேரினாலெனதுசொல்லைப்பெரியவர்தள்ளார்தாமே

கட்டியக்காரன்வருகிற-விருத்தம்.

தேர்கொண்டவசந்தவீதிச் செல்வர்குற்றாலத்தீசர்
பார்கொண்ட விடையிலேறும்பவனியெச்சரிக்கைகூற
நேர்கொண்டபுரிநூன்மார்பு நெடியகைப்பிரம்புமாக
கார்கொண்டமுகிலேறென்னக்கட்டியக்காரன்வந்தான்.

இ-ம்-தோடி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

க. பூமேவுமநுவேந்தர்முதலோனாய்
புரந்திடுஞ்செங்கோலானைபிரம்புடையான்

உ மாமேருச்சிலையாளர்வாதர்குற்றாலநாதர்
வாசற்கட்டியக்காரன்வந்தனனே.

கட்டியக்காரன்சொல்லுகிற-விருத்தம்.

மூக்கெழுங்கழுத்துடையாரணிவருக்கைகன்னகாமூதூர்வீதி
வாக்கெழுந்தகுறுமுனிக்காய்மறிவெழுந்தகரங்காட்டும்வள்ளலார்சீர்த்
தேகமெழுந்தமறைநான்குஞ்சிலம்பெழுந்தபாதர்விடைச்சிலம்பிலேறி
மேக்கெழுந்தமதிசூடிக்கிழக்கெழுந்தஞாயிறுபோல்மேவினாரே.

திரிகூடநாதர்பவனிவருதல்.

தரு-இ-ம்-பந்துவாளி-தாளம்-சாப்பு.

பல்லவி.

பவனிவந்தனரே-மழவிடை-பவனிவந்தனரே.

அநுபல்லவி.

அவனிபோற்றியகுறும்பலாவுறைமவுனநாயகரெவனநாயகர்
சிவனுமாயரியயனுமானவர்களால்விடையதனிலே (பவனி)

சரணங்கள்.

௧, அண்டர்கூட்டமுமுனிவர்கூட்டமுமசுரர்கூட்டமுமனிதராகிய
தொண்டர்கூட்டமுமிமையிலாரெனச்சூழ்ந்துதனித்தனிமயங்கவே
பண்டைநாளிவர்தேவரிவரென பகுத்துநிறுவியவேளைதொறுந்தொ
றும், மண்டலீகரைநந்திபிரம்படிமகுடகோடியிற்புடைக்கவே, பவ

௨, தடுப்பதொருகரங்கொடுப்பதொருகரந்தரித்தசுடர்மழுவிரித்ததொ
ருகரம், எடுத்தசிறுமறிபிடித்ததொருகரமிலங்கப்பணியணிதுலங்கவே
அடுத்தவொருபுலிகொடுத்தசோமனுமானைகொடுத்தவிதானச்சேலையு
ம், உடுத்ததிருமருங்கசையமாலயனெடுத்தபரிகரிமிசையவே.(பவ)

௩, தொடருமொருபெருஞ்சாளியேறியதோன்றல்செயப்படைத்தாங்க
வே, யாடல்குலாவியதோகைவாகனத்தரசுவேல்வலம்வாங்கவே
படலமார்பினிற்கொன்றைமாலிகைபதக்கமணியொளிதேங்கவே
யுடையநாயகன்வரவுகண்டுலகெலாந்தழைத்தோங்கவே. (பவ)

௪, இடியின்முழக்கொடுபடருமுகிலெனயானைமேற்கனபேரிமுழக்கமு
ந்துடியின்முழக்கமும்பரந்துதிசைக்கரிதுதிக்கையாற் செவிபுதைக்
கவே, அடியார்முழக்கியதிருப்பல்லாண்டிசையடைத்தசெவிகளுந்தி
றக்கமூவர்கள், வடிசெய்தமிழ்திருமுறைகளொருபுறமறைகளொரு
புறம்விளங்கவே. (பவனி)

௫, கனகதரும்புருகின்னரங்கழலாசவீணைமிழற்றவே
யானகாசிருமுத்தின்சிவிகைபொன்னாலவட்டநிழற்றவே
வநிதைமார்பலகுஞ்சஞ்சாமரைவரிசைவிசிறிசுழற்றவே
தனதனிந்திரன்வருணன்முதலியசகலதேவரும்வழுத்தவே. (பவ)

௬, சைவர்மேவிடச்சமணர்கீழிடச்சகலசமயமுமேற்கவே
கைவலாழியங்கருணைமாலொடுகமலத்தான்புடைகாக்கவே
ஐவர்நாயகன்வந்தனன்பலவமரர்நாயகன்வந்தனன்
தெய்வநாயகன்வந்தனனெனச்சின்னமெடுத்தெடுத்தார்க்கவே. (பவ)

௭, சேனைப்பெருக்கமுந்தானைப்பெருக்கமுந்தேன் பெருக்கமுங்காரின்
பெருக்கமும், ஆனைப்பெருக்கமுங்குதிரைப்பெருக்கமுமவனிமுழு
தினும்நெருங்கவே, மோனைக்கொடிகளின் காடுநெடுவெளிமூடியட
ங்கலுமோடிபிருண்டபி, னேணைச்சுடர் விரியிடபகேதனமெழுந்து
திசைதிசைவிளங்கவே. (பவனி)

௮, கொங்குமலர்க்குழல்தெய்வமங்கையகுரவைபரவையைநெருக்கவே
யொத்ததிருச்செவியிருவர்பாடல்களுலகமேழையுமுருக்கவே
மத்தளப்புயல்போன்முழக்கிடமயிலனார்நடம்பெருக்கவே
சத்திபயிரவிகௌரிகுழல்மொழித்தையலாளிடமிருக்கவே. (பவ)

பவனிகாணப்பெண்கள்வருகிற

விருத்தம்.

மாலேறும்விடையில்வருந்திரிகூடப்பெருமானார்பவனிகாணக்
காலேறுங்காமனுக்கையேறும்படைப்பவுஞ்சாய்க்கன்னிமார்கள்
சேலேறுங்கலகவிழிக்கணைதீட்டிப்புருவநெடுஞ்சிலைகள்கோட்டி
மாலேறப்பொருதுமென்றுமணிச்சிலம்புமுரசறையவருகின்றாரே.

பெண்கள்சொல்லுகின்ற-கண்ணிகள்.

இ-ம்-புன்னாகவராளி-சாப்புதாளம்.

க, ஒருமானைப்பிடித்துவந்தபெருமானைத்தொடர்ந்துவரு
மொருகோடிமான்கள்போல வருகோடிமடவார்

உ; புரிநூலின்மார்பனிவனயனென்பாரயனாகிற்
பொங்கரவமேதுதனிச் சங்கமேதென்பார்

ங, விரிகருணைமாலென்பார்பாலாகில்விழியின்மேல்
விழியுண்டோமுடியின்மேல் முடியுண்டோவென்பார்

ச. இருநாலுநான்முகனுந்திருமாலும்வருகையா
லீசனிவன்திரிகூட வாசனிவனென்பார்

ரு, ஒருகைவளைபூண்டபெண்கள்ஒருகைவளைபூணமறந்
தோடுவார்கைப்பவரை நாடுவார்கமிழ்வார்

சு, மெய்வளையுமறுவுடையதெய்வநாயகன்முடித்த
வெண்மதியும்விளங்குதெங்கள் பெண்மதியோவென்பார்

எ, இருகனத்துராவிக்கைதனைப்பரையிலுடைதொடுவார்
இந்தவுடராவிக்கையெனச் சந்தமுலைக்கிடுவார்

அ, கருதுமனம்புறம்போகக்கண்ணுக்குமையெழுத்த
கையுமாப்பொருகண்ணிட்ட மையுமாய்வருவார்

கூ, திருபணிவனன்னகரத்தெருவிலேநெடுநேரம்
நில்லானோஒருவசனஞ் சொல்லானோவென்பார்

ய, கைவளைத்துக்கிடைக்குமிவன்மெய்வளையும்பாம்புகட்குப்
பசியாதோதென்றலைத்தான் வென்பார்

யக, இவ்வளைக்கைத்தோளழுந்தவிவன்மார்பிலழுந்தாத
தென்னமுலையெமக்கெழுந்த வன்னமுலையென்பார்

யஉ, மைவளையுங்குழல்சோரக்கைவளைகொண்டானிதென்ன
மாயமோசடைதரித்த ஞாயமோவென்பார்

வசந்தவல்லிவருகின்றவிருத்தம்.

நன்னகர்ப்பெருமான்போய் நாணமுங்கலையுந்தோற்
கன்னியர்க்குக்கப்போற்காட்டிக்காமவேள்கலக்கமூட்டிப்
பொன்னணிதிலதந்தீட்டிப் பூமலர்மாலைசூட்டி
வன்னமோகினியைக்காட்டிவசந்தமோகினிவந்தாளே.

இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க, வங்காரபூஷணமும்பூட்டித்-திலதந்திட்டி
மாரனைக்கண்ணாலேமருட்டிச்
சிங்காரமோகனப்பெண்ணாள்வசந்தவல்லி
தெய்வரம்பைப்போலவேவந்தாள்

உ, கண்ணுக்குக்கண்ணிணைசொல்லத்-திரிகூடற்
கண்ணுமலைப்பார்வையாலவெல்லப்
பெண்ணுக்குப்பெண்மயங்கவே-வசந்தவல்லி
பேடையன்னம்போலவே-வந்தாள்

ந, கைபாரச்சூடகமிட்டு-மின்னாரை-மின்னாரைவெல்லக்
கண்ணிவொருநாடகமிட்டு
ஒய்யாரமாகநடந்து-வசந்தவல்லி
யோவியம்போலவேவந்தாள்

ச. சல்லாபமாதுலீலர்-குற்றாலநாதர்
சங்கநெடும்வீதிதனிலே
உல்லாசமாதுரதிபோல்-வசந்தவல்லி
யூர்வசியுநாணவேவந்தாள்.

இதுவுமது.

இ-ம்-பைரவி-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

க, இருண்டமேகஞ்சுற்றிச்சுருண்டுசுழிபெறியுங்கொண்டையாள்கு
ஏறியாடிநஞ்சைச்சூறைபாடும்விழிக்கொண்டையாள் (ழை
திருந்தபூமுருக்கினரும்புபோலிருக்குமிதழினாள்வரிச்
சிலைபைப்போல்வளைந்துபிறையைப்போலிலங்குநுதலினாள்

உ, அரம்பைதேசவில்லுமவிரும்பியாசைசொல்லுமபுருவத்தாள்-பி
அரினைமயக்குமொருகருவமிருக்குமங்கைபருவத்தாள் (றர்
கரும்புபோலினித்தமருந்துபோலவடித்தசொல்லினாள்-கடல்
கத்துந்திரைகொழித்தமுத்துநிரைபதித்தபல்லினாள்

ந, பல்லினழகைவெட்டிப்பார்க்குமூசகிலொருமுக்கினாள்-மதி
படரும்வடிவுதங்கியழகுகுடிகொளுமுகத்தினாள்
வில்லுப்பணிபுனைந்துவல்லிக்கமுகைவென்றகழுத்தினாள்- ஜகம்
விலையிட்டெழுதியின்பநிலையிட்டெழுதுந்தொய்யிலெழுத்தினா

ச, கல்லுப்பதித்ததங்கச்செல்வக்கடகமிட்டசெங்கையாள்- எங்கும்
கச்சுக்கிடக்கினுந்திந்திச்சுக்கிடக்குமிருகொங்கையாள்
ஒல்லுங்கருத்தர்மனக்கல்லுஞ்சுழிக்குமெழிலுந்தியாள்-மித
ஒழுங்குகொண்டுள்ளத்தைவிழுங்குஞ்சிறுரோமபந்தியாள்

டு, துடியுள்ளடங்கியொருபிடியுள்ளடங்குஞ்சின்னவிடையினாள்-கா
துட்டனாணமனைக்குக்கட்டுங்கதலிவாழைத்தொடையினாள் (மத்

அடுக்குவர்னச்சேலையெடுத்துநெறிபிடிக்கவுடையினாள்-மட
வன்னநடையிலொருசின்னநடையினாள்

௬,வெடித்தகடலமுதையெடுத்துவடிவுசெய்தமேனியாள்-ஒரு
வீமப்பாகம்பெற்றகாமப்பாலுக்கொத்தசீனியாள்
பிடித்தசுகந்தவல்லிக்கொடிபோலசந்தவல்லிபெருக்கமே-சத்தி
பீடவாசர்திரிகூடநாதர்சித்தமுருக்குமே.

வசந்தவல்லி-பந்தடிக்கின்ற

விருத்தம்.

வித்தகர்திரிகூடத்தில் வெளிவந்தவசந்தவல்லி
தத்துறுவிளையாட்டாலோ தடமுலைபனைப்பினாலோ
நத்தணிகரங்கள்சேர்ப்ப நாலடிமுன்னேயோங்கிப்
பந்தடிபின்னேவாங்கிப் பந்தடிபயில்கின்றாளே.

இ-ம்-பைரவி சாப்புதாளம்.

கண்ணிகள்.

௧,செங்கைவண்டுகலீர்கலீரென்று செயஞ்செயமென்றாட-இடை
சங்கதமென்றுசிலம்பொடுதண்டைகலந்தாட-இரு (மலர்ப்
கொங்கைகொடும்பகைவென்றனமென்றுகுழைந்துகுழைந்தாட
பைங்கொடிநங்கைவசந்தசௌந்தரிபந்துபயின்றனளே

௨,பொங்குகனங்குழைமண்டியசெண்டைபுரண்டுபுரண்டாடகுழ
குயில்வண்டுதலைந்ததுகண்டுமதன்சிலைவண்டோட-இனி (ன்
இங்கிதுகண்டுலகென்படுமென்றுமென்றிடைதிண்டாட-மலர்ப்
பங்கயமங்கைவசந்தசௌந்தரிபந்துபயின்றனளே

௩,சூடகமுன்கையில்வாள்வளைகண்டிருதோள்வளைநின்றாட-புனை
பாடகமுஞ்சிறுபாதமுமங்கொருபாவனைகொண்டாட-நய
நாடகமாடியதோகைமயிலெனநன்னகர்வீதியிலே-அணி
யாடகவல்லிவசந்தவொய்யாரியடர்ந்துபந்தாடினளே

௪,இந்திரையோவிவள்சுந்தரியோதேவரம்பையோமோகினியோ-மன
முந்தியதோவிழிமுந்தியதோகரமுந்தியதோவெனவே-உயர்
சந்திரசூடர்குறும்பலவீசுரர்சங்கணிவீதியிலே-மணிப் (ளே
பைந்தொடிநாரிவசந்தவொய்யாரிபொற்பந்துகொண்டாடின

இதுவும் வசந்தவல்லி பந்தாடுகின்ற

விருத்தம்.

கொந்தடிப்பூங்குழல்சரியமன்னகரில்வசந்தவல்லிகொடியமகன்
முந்தடிபிந்தடியிடைபோய்முகரநாலடிநடந்துமுடிகிமாதா
சந்தடியிற்றிருகியிடசாரிவலசாரிகற்றிச்சகிமார்சூழப்
பந்தடிக்கும்பாவனையைப்பார்க்கவயனாயிரங்கண்படைத்திலானே

தரு. இ-ம்-சாப்போகி-ஆதிதாளம்.

பல்லவி.

பந்தடித்தனள்வசந்தசுந்தரி-வித்தையாகவே

அநுபல்லவி.

மந்தரமுலையேசலாட மகரக்குழைசஞ்சலாடச் சுந்தரவிழிபூசலாடத்
தொங்கத்தொங்கத்தொங்கத்தொம்மெனப் பந்த

சரணங்கள்.

க. பொன்னிறவொளிவில்வந்துகாவியமின்னிறவொளிவுபோலவே
சொன்யத்தனைநாடிநாடித்தோழியருடன்கூடிக்கூடி
நன்னகர்த்திரிகூடம்பாடிநகுர்தகதிகுதிகுர்த்தோமெனப் பந்த

வசந்தவல்லி-சுவாமிகளைக்காண்கின்ற

விருத்தம்.

வருராங்குவீதிதன்னில் வசந்தபூங்கோதைகாவி
லிருபந்துகுதிகொண்டாட விருபந்துமுலைகொண்டாட
வொருபந்துகைகொண்டாட வொருசெப்பிலஞ்சிபந்துந்
தெருவந்துவித்தையாடுஞ் சித்தரைபெதிர்கண்டாளே.

தரு-இம்-அடாணா ரூபகதாளம்

பல்லவி.

இந்தச்சித்தராரோ-வெகு

அநுபல்லவி.

வித்தைக்காரராகவிடையில்வந்தாரோ இந்தச்

சரணங்கள்.

க. நாகம்புயத்திற்கட்டிநஞ்சுகழுத்திற்கட்டிக்
காகமணுகாமலெக்குங்காடுகெட்டி
பாகந்தனிலொருபெண்பச்சைக்கிளிபோல்வைத்து
மோகமாயொருபெண்ணைமுடியில்வைத்தார் இந்தச்

உ. மெய்யிற்சிலம்பழகுங்கையின்மழுவழகும்
மையார்விழியார்கண்டால்மயங்காரோ
செய்யசடையின்மேலேதிங்கட்கொழுந்திருக்கப்
பையைவிரிக்குதம்மாபாம்புசும்மா இந்தச்

ங. அரைக்கண்பார்வையாலேயனங்கன்றங்கமாக
உருக்கிப்போட்டார்கண்டவுடனேதான்
பெருக்கம்பார்க்கிலெங்கள்திருக்குற்றாலர்போல
விருக்குமிவர்செய்மாயமொருக்காலே இந்தச்

தோழிமார்சொல்லக்கேட்டு
வசந்தவல்லி மோகங்கொள்ளுதல்

விருத்தம்.

திங்களைமுடித்தார்கண்டாய் திரிகூடச்செல்வர்கண்டா
யெங்குளசித்துக்கெல்லா மிறையவரிவரே யென்று
நங்கைமார்பலருங்கூற நன்மொழித்தேறன்மார்த்தி
மங்கையர்வசந்தவல்லி மனங்கொண்டாள்மயல்கொண்டாளே.

இ-ம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

க. முனிபரவுவினியானோமுழுப்பலவின்கனிதானோ
கனியில்வைத்தசெந்தேனோகருத்துருக்கவந்தானோ
தினகரன்போற்சிவப்பழகுந்திருமிடற்றிற்கருப்பழகும்
பனகவணிக்காதுங்கண்டாற்பாவையுந்தானுருகிடாதோ

உ. வாகனைக்கண்டுருகுதையோமயக்கமதாய்வருகுதையோ
மோகமெனபதிதுதானோமுன்னமேநானறிவேனோ
ஆகமெல்லாம்பசந்தேனேயன்னைசொல்லுங்கசந்தேனே
தாகமனறிப்பூணேனேசரிவளையுங்காணேனே.

பாங்கிகள்-புலப்பல்

விருத்தம்.

நடைகண்டாலன்னந்தோற்கு நன்னகர்வசந்தவல்லி
விடைகொண்டாளெதிர்போய்ச்சங்க வீதியிற்சங்கந்தோற்றாள்
சடைகொண்டானுடைதான்கொண்டு தன்னுடைகொடுத்தானைய
னுடைகொண்டவழக்குத்தானோ வூர்கண்டகேர்கண்டானே.

இ-ம்-தோடி-சாப்புதாளம்.

கண்ணிகள்,

க. ஆசைகொண்டுபோரில்வீழ்ந்தாள்நேசமானெனன்பார்-விளை
யாடாள்பாடாள்வாடாமாலைசூடாள்காணெனன்பார்
பேசொணாதோமோசமென்னமோசமோவென்பார்
பேயோவென்பார்பிச்சோவென்பார்மாயமோவென்பார்

உ. ஐயோவென்னசெய்வோமென்பார்தெய்வமேயென்பார்-கனைப்
பாச்சோவென்பார்மூச்சேதென்பார்பேச்சேதோவென்பார்
கையிற்றிருநீறெடுப்பார்மையலாமெல்லாம்-சூலக்
கையாதிரிகூடநாதாகண்பாரெனபார்

வசந்தவல்லியைப்-பாங்கிகளுபசரித்தல்.

விருத்தம்.

வானவர்திருக்குற்றாலர்மையலால்வசந்தவல்லி
தானுடல்சோர்ந்தாளென்றுதமனியமாடஞ்சேர்ந்து
மேனையாரமுதேதோற்ற மின்னனார்விழித்தபேரைக்
கூனைகொண்டமிழ்த்துவார்போற் குளிர்ச்சியாய்ச்செப்புவாரே.

இ-ம்-கல்யாணி சாப்புதாளம்.

கண்ணிகள்.

க முருகுசந்தனக்குழம்புபூசுவார்-விரகத்தீயை
மூட்டிமூட்டிவிசிறிவீசுவார்
கருகுதேயுடலுருகுதேயென்பார்-விரிதற்பூவுங்
கரியுதேமுத்தமபொரியுதேயென்பார்

உ. அருகிலிருந்துகைதகண்டத்துவார்-எடுத்துமாதர்
அணைத்துவாழைக்குருத்திற்கிடத்துவார்
பெருகுநன்னைகர்க்குறும்பலாவினார்-வசந்தமோகினி
பெருநிலாவினொடுதுலாவினள்.

வசந்தவல்லி-சந்திரதூஷணஞ்செய்தல்.

விருத்தம்.

பெண்ணிலோர்குழன்மொழிக்கோர்
பங்குகொடுத்தவர்கொடுத்தபிரமையாலே
மண்ணிலேமதிமயங்கிக்கிடக்கின்றே
னுனக்குமதிமயக்கந்தானோ
கண்ணிலேநெருப்பைவைத்துக்
காந்துவாருடன்கூடிக்காந்திக்காந்தி
விண்ணிலேநெருப்பைவைத்தாய்
தண்ணிலாக்கொடும்பாவிவெண்ணிலாவே.

இ-ம்-வராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. தண்ணமுதுடன்பிறந்தாய் வெண்ணிலாவே-அந்தத்
தண்ணளியையென்மறந்தாய் வெண்ணிலாவே
பெண்ணுடன்பிறந்ததன்றோ வெண்ணிலாவே-என்றனை
பெண்மைகண்டுங்காயலாமோ வெண்ணிலாவே

உ. விண்ணிலேபிறந்தவர்க்கோ வெண்ணிலாவே-ஒரு
விட்டுநாயெனப்பிறந்ததற்கோ வெண்ணிலாவே

கண்ணில்விழியாதவர்போல் வெண்ணிலாவே-மெத்தக்
காந்தியாட்டமாடுகிறாய் வெண்ணிலாவே

௩. ஆகடியஞ்செய்தல்லவோ வெண்ணிலாவே-நீதா
னாட்படியம்போற்குறைந்தாய் வெண்ணிலாவே
மோகம்வரக்காணேனென்றால் வெண்ணிலாவே-அந்த
வேகமுனக்கானதென்ன வெண்ணிலாவே

௪. நாகமென்றேயெண்ணவேண்டாம் வெண்ணிலாவே-இது
வாருகுழல்பின்னல்கண்டாய் வெண்ணிலாவே
கோகனகவீறழித்தாய் வெண்ணிலாவே-திரி
கூடலிங்கர்முன்போய்க்காய்வாய் வெண்ணிலாவே

வசந்தவல்லிமன்மததூஷணஞ்செய்தல்.

விருத்தம்.

தண்ணிலாமௌலிதந்தமையலானதையறிந்துமயலர்கள் (ரோ
எண்ணிலாப்பகையெடுத்தாரின்னகரைநன்னகரென் றவர்சொன்ன
அண்ணலார்திரிகூடநாதரெம்பாலெனையுமறந்திட்டாரோ
வெண்ணிலாக்குடைபிடித்து மீனகேதனம்பிடித்தவேனிலானே.

இ-ம்-எதுகுலகாம்போதி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

௧. கைக்கரும்பென்னகணையென்னநீயென்ன மன்மதா-இந்தச்
செக்கரும்பாவிநிலாவுமேபோதாதோ மன்மதா
மைக்கருங்கண்ணாளிரதிக்குமால்கொண்ட மன்மதா-விடை
வல்லார்க்குமால்கொண்டபொல்லாப்பெண்மேலுண்டோ-மன்மதா

௨. திக்கெல்லாந்தென்றற்புலிவந்துபாயுதே மன்மதா-குயிற்
சின்னம்பிடித்தபின்னையைபிடியாதே மன்மதா
அக்காளுஞ்சகிவெட்காமலேசுவாள் மன்மதா-அவ
ளல்லாமற்றுபொருபொல்லாதநீலிகாண் மன்மதா

௩. நேரிழையாரைமுன்னாயும்பாரடா மன்மதா-கண்ணில்
நித்திரைதானொருசற்றுவாச்சுதே மன்மதா
பேரிகையேனன்றிபூரிகையேன்பிள்ளாய் மன்மதா-சிறு
பெண்பிள்ளைமேற்பொருதாண்பிள்ளையாவையோ-மன்மதா

௪. வார்சடையீதல்லதார்குழற்பின்னல்காண் மன்மதா-நெற்றி
வந்துகளங்கமல்லசிந்தூரரேகைபார் மன்மதா

நாரிபங்காளர்தென்னாரியநாட்டினூர் மன்மதா-எங்கள்
நன்னகர்குற்றாலர் முன்னமேசொல்லுவாய் மன்மதா

பாங்கிவினவுதல்-விருத்தம்.

படியேழுடையார்திரிகூடப்படைமாமதனைப்பயிற்றியசொல்
அடியேசகியாதிருக்கையிலேயதுநான்பயின்றலாகாதோ
கொடியேமதுரம்பழுத்தொழுகுங் கொம்பேவம்புபொருதமுலைப்
பிடியேயெமதுகுடிக்கொருபெண்பிள்ளாய்கருத்துவிள்ளாயே.

வசந்தவல்லி-பாங்கிக்குரைத்தல்.

இ-ம்-கல்யாணி சாப்புதாளம்.

கண்ணிகள்.

க. மெய்பார்க்குமெய்யாதிரிகூடநாயகர்மீதில்-மெத்த
மையல்கொண்டேனந்தச்செய்திகைக்கேளாய்நீசகியே
செப்பச்சடையுந்திருக்கொன்றைமாலையழகு-மவர்
கையின்மழுவுமென்கண்ணைவிட்டேயகலாதே

உ. கங்கைக்கொழுந்தணிசெய்யக்கொழுந்தைநான்கண்டு-குளிர்
திங்கட்கொழுந்தையுந்தீக்கொழுந்தாக்கிக்கொண்டேனே
சங்கக்குழையாரைச்சங்கமதுகினிற்கண்டு-இரு
செங்கைக்குட்சங்கமுஞ்சேர்ந்துமருவிட்டேனே

௩. மன்றற்குளவிதினங்கொட்டக்கொட்டநொந்தேனே
தென்றற்குளவிதினங்கொட்டக்கொட்டநொந்தேனே
குன்றச்சிலைபாளர்குற்றாலநாதர்முன்போனேன்-மதன்
வென்றிச்சிலைகொண்டுமெல்லவெல்லப்பொருதானே

௪. பெம்மானைநன்னகர்ப்போஜவீதியிற்கண்டு
மைம்மானைக்கண்டுதலையைநெகிழவிட்டேனே
செம்மேனிதன்னிற்சிறுகறுப்பாவதநான்கண்டு-இப்போ
அம்மாவென்மேனிபடங்கலுமேகறுத்தேனே

௫. வெள்ளிவிடையில்வியாழப்புனைந்தாரைக்கண்டு-இந்த
கள்ளிபதிங்களைனாயிறுபோலக்கண்டேனே
எள்ளளவுணுமுறக்கமுமில்லாரைக்கண்டுநானும்
ஒள்ளியவூணுமுறக்கமுமற்றுவிட்டேனே.

பாங்கிபழித்தல்-விருத்தம்.

தரைப்பெண்ணுக்கணிபோல்வசந்தமணியக்கொடியேமாதர்
துறைப்பெண்ணேவசந்தவல்லிசொன்னபேதமைக்கென்சொல்வேன்
வரைப்பெண்ணுக்காசைபூண்டு வளர்சங்கமறுகினூடே
நரைத்தமாடேறுவார்க்கோநங்கைநீமயல்கொண்டாயே.

வசந்தவல்லி-சுவாமிகளைப்புகழ்ந்துகூறல்.

இ-ம்-சௌராஷ்டிரம்-ரூபகதாளம்.

கண்ணிகள்.

மன்னவர்குற்றாலர்செய்தியின்னமின்னங்கேளாயோமானே-அவர்
வாகனத்தின்மால்விடைக்குமேலாகமலைலாமோரடிகண்மானே
சன்னிதியின்பேறல்லவோபொன்னுலகிற்றேவர் செல்வமானே-தினஞ்
சந்திரருஞ்சூரியரும்வந்திறக்கும்வாசல்கண்டாய்மானே
நன்னகரிலிருக்குநானொருத்திதானோவாசைகொண்டேன்மானே
கன்னியருமாசைகொண்டார் பன்னியருமாசைகொண்டமானே
தென்னிலங்கைவாழுமொருகன்னிகைமண்டோதரியாள்மானே அவர்
பொன்னடியிற்சேர்க்கவேயன்னதவஞ்செய்தாளேமானே

இதுவும்-வசந்தவல்லிபாங்கிகளுக்குச்சொல்லுகிற

விருத்தம்.

வேரிலேபழம்பழுத்தூரிலேசுளைவெடித்துவெடித்ததீந்தேன்
பாரிலேபாதாளகங்கைவந்ததெனக்குதித்தபதித்தேன்கங்கை
நீரிலேசுளைபெருகுங்குறும்பலாவிலிருக்குநிமலமூர்த்தி
பேரிலேபிரமைகொண்டபெண்களிலேநானுமொருபெண்கொடியே.

பாங்கிசொல்-விருத்தம்.

வசந்தவுல்லாசவல்லிவல்லிக்குமெல்லிபேசி
பசந்ததோர்பசப்புங்கண்டால்பரமன்மேலாசைகொண்டாய்
நிசங்கருந்திருக்குற்றால நிரந்தாமூர்த்தியுன்பா
லிசைந்திடக்கருமமேதோ விசையநீயிசைத்திடாயே.

வசந்தவல்லிவருந்துதல்.

இ-ர்நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. புரத்தைநெருப்பைமூவர்க்கவித்தவர்மையல்கொண்ட வென்
னொருகதிகாமநெருப்பையவிக்கலார்
பருத்தமலையைக்கையிலிணக்கினர் கொங்கையாள்
பருவமலையைக்கையிலிணக்கிலார்

௨-அஞ்சுதலைக்குளாறுதலைவைத்தோர் எனதுமனதினி
அஞ்சுதலைக்கோராறுதலையார்
நஞ்சுபருக்கியமுகங்கொடுத்தவர் எனதுவாள்வி
நஞ்சுபருக்கியமுதந்கொடுக்கிலார்

௩,தேவர்துரைதன்சாபந்தீர்த்தவர் வன்னமாங்குயி
இன்னத்துரைதன்சாபந்தீர்க்கிலார்
யாவரும்புகழ்திருக்குற்றாலர்தாம் சகலபேர்க்
மிரக்குவாரெனக்கிரங்கிலார்பெண்ணே

பாங்கிசொல்லுகிற-விருத்தம்.

நன்னகர்திருக்குற்றாலநாதர்மேலாசைபூண்டு
சொன்னவர்க்கிணங்காவார்த்தைசொல்லவும்படித்துக்கொண்டாய்
சன்னிதிவிசேஷஞ்சொல்லத்தக்கதோமிக்கதோதான்
என்னிலானதுநான்சொன்னேனினியுனதிச்சைதானே.

வசந்தவல்லிபாங்கியைத் தூதனுப்புதல்.

தரு-இ-ம்-காம்போதி ஆதிதாளம்.

பல்லவி.

தூதுநீசொல்லிவாராய்பெண்ணே-குற்றாலர்முன்போய்த்
தூதுநீசொல்லிவாராய்பெண்ணே.

அநுபல்லவி.

ஆதிநாட்சுந்தரர்க்காய்தூதுபோனவர்பாலே தூதுநீ

சரணங்கள்.

௧. உறங்கவுறக்கமும்வாராதுமையஞ் செய்தாரைமறந்தால்மறக்க
வுங்கூடாது-பெண்ஜனனமென்றுபிறந்தாலும்பேராசையாகாது-ஆகா
தென்றுநான் அறிந்துஞ்சலுக்கைக்காரர்க்காசையானேனிப்போது தூ
து)௨. நேற்றைக்கெல்லாங்குளிர்ந்துகாட்டி-இன்றுகொதிக்கும் நித்தி
லாப்பாவிக்கென்னபோட்டி-நடுவேயிந்தக்- காற்றுக்குவந்ததொருகோ
ட்டிவிரகநோய்க்கு-மாற்றுவருந்தமுக்கணமருந்தென்று பரஞ்சாட்டி
(தூது)௩. வந்தாலிந்நேரம்வரச்சொல்லு-வாராதிருந்தால்- மாலையாகி
லுந்தரச்சொல்லு-குற்றாலநாதர் தந்தாலென்னெஞ்சைத்தரச்சொல்லு
தாராதிருந்தால்-தாம்பெண்ணாகியபெண்ணை நானவிடேனென்றுசொ
ல்லு (தூது)

வசந்தவல்லி-பாங்கிக்குச்சந்திசமயஞ்சொல்லுதல்.

விருத்தம்.

செவ்வேளைமீனருள்வார்சிலவேளையேன்றருள்வார்திரும்பத்தாமே
யவ்வேளையழைத்தருள்வா ரார்வேளையொருவருக்குமறியொண்ணுதா
கைவேழமுரித்தவர்குற்றாலர்கொலுவமரருக்குங்காணொணுதால்
எவ்வேளைபலவுமுண்டுவியலவேளையான்சொலக்கேண்மினனனே.

தரு இம் பியாகடை-ஆதிதாளம்.

௧. திரிகூடராஜருக்குத்திருவனந்தல்முதலாகத்
திணமுமொனபதுதரங் கொலுவிற்சகியே

௨. பெரிதானவபிஷேகமெழுகாலமுமொருவர்
பேசுதற்குச்சமயமல்ல கண்டாய்சகியே

௩. வருநாளிலொருமூன்றுதிருநாளுமவசந்தனு
மாதவழிவருஷவழி சிறப்புஞ்சகியே

௪. ஒருநாளுக்கொருநாளில்வியனுகக்குழன்மொழிப்பெண்
ணுகந்திருக்குங்கொலுவேளை கண்டாய்சகியே
௫. பெத்தரிக்கமிகுந்திருக்குற்றாலநாதலிங்கர்
பெருங்கொலுவிற்சமய மறியாமற்சகியே
௬. சித்தரொடுதேவர்கணஞ்சிவகணங்கள்தடை செய்த்
திருவாசற்கடைநிற்பார் சிலபேர்சகியே
௭. அத்தலையிற்கடந்தவர்கள்நந்திபிரம்படிக்கொதுங்கி
ஆட்கொண்டார்குறட்டில்நிற்பார் சிலபேர்சகியே
௮. மைந்தருங்கன்மாதர்விட்டவண்டுகளுங்கிள்ளைகளும்
வாசல்தொறுங்காத்திருக்கும் கண்டாய்சகியே
௯. கோலமறையோதியசங்கரவிசுவநாதனருள்
குற்றாலச்சிவராமநம் செய்யுஞ்சகியே
௰. பாலாறுநெய்யாறபிஷேகநைவேத்தியமும்
பணிமாறுகாலமுங் கொண்டருளிச்சகியே
௰௧. நாலுமறைப்பழம்பாடமூவர்சொன்னதிருப்பாட்டு
நாலுகவிப்புலவர்புதுப் பாட்டுஞ்சகியே
௰௨. நீலகண்டர்குற்றாலதேவியுடன்கொலுவிருப்பார்
நீக்கமில்லையெல்லார்க்கும் பொதுக்காண்சகியே
௰௩. அப்பொழுதுகுற்றாலர்தேவியுடன்கொலுவிருப்பார்
ஆசைசொல்லக்கூடாது கண்டாய்சகியே
௰௪. முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார்வந்துநின்று
முயற்சிசெய்யுந்திருவநந்தற் கூடிச்சகியே
௰௫. கொப்பழகுகுழன்மடந்தைபள்ளியறையிருந்து
கோயில்புகுமேகாந்தச் சமயஞ்சகியே
௰௬. மைப்பழகுவிழியாயென்பெருகாளைநீசொல்லி
மறுபாலைவாங்கிநீ வாராய்சகியே

கொச்சகம்.

தெண்ணீர்வடவருவித்தீர்த்தத்தாற்செஞ்சடைமேல்
விண்ணீர்புனைந்தார்விரகவெம்மைமக்காற்றாமல்
கண்ணீர்நறும்புனலாய்க்கைவளையேசெய்தவையாய்ப்
உண்ணீரிற்கூடலுரைகிணறுசெய்வாளே.

கூடல்சிந்து.

இ-ம் பந்துவராளி தாளம்-திரிபுடை,

௧, பாடியமறைதேடியநாயகர்பன்னகர்பணிநன்னகர்நாயகர்
பாவலர்மனுக்காவலர்நாயகர்பதஞ்சலிபணியாளர்
௨, கோடிபதிகுடியநாயகர்குழன்மொழிபுணர்அழகியநாயகர்
குறும்பலாவினிற்கூடுவார்மேனிற்கூடலேநீகண்டாய்

விருத்தம்.

ஆடல்வளைவீதியிலேயங்கணர்முன்போட்டசங்கமாங்குவீட்டில்
தேடல்வளைக்குறிபோலக்கூடல்வளைத்திருந்துவலவிதியங்கும்போதில்
கூடல்வளைக்கரமசையமாத்திரைக்கோலேந்திமணிக்கூடைதாங்கி
மாடமருகூடுதிரிகூடமலைக்குறவஞ்சிவருகின்றாளே.

குறத்திவருதல் - ஆசிரியப்பா.

சைவமுத்திரையைவானின்மேற்றருக்குந்
தெய்வமுத்தலைசேர்திரிகூடமலையான்
வான்புனல்குதட்டுமடைக்குருகினுக்குந்
தேன்புரையேறுபூஞ்சித்திரநதியான்
ஏரிநீர்செழிக்கவாரிநீர்கொழிக்கு
மாரிநீர்வளர்தென்னாரியநாட்டான்
கன்னிமாப்பழுத்துக்கதலிதேன்கொழித்துத்
செந்நெல்கரத்தளிக்குநன்னகர்ப்பதியான்
ஓராமறையோங்கியடரியர்ன்
ஈராயிரமருப்பேந்தியயானையான்
சேவகவிருதுஜெயவிடைக்கொடியான்
மூவகைமுரசுமுழங்குமண்டபத்தான்
அண்டகோடிகளையாணையாலடக்கிக்
கொண்டல்போறகவிக்குங்கொற்றவெண்குடையான்
வாலசுந்தரிகுழல்வாய்மொழியருட்கண்
கோலவண்டிணங்குங்கொன்றைமாலிகையான்
பூவளர்செண்பகக்காவளர்தம்பிரான்
தேவர்கள்தம்பிரான்திருவருள்பாடி
இமகுநீறணிந்துதிலகமுழுதிக்
குலமணிப்பாசியுங்குன்றியும்புனைந்து
சலவைசேர்மருங்கினிற்சாத்தியகூடையும்
வலதுகைப்பிடித்தமாத்திரைக்கோலும்
மொழிக்கொருசப்பும்முலைக்கொருகுலுக்கும்
விழிக்கொருசிமிட்டும் வெளிக்கொருபகட்டுமாய்
உருவசியாமவைகருவமுமடங்க
முறுவலின்குறும்பால்முனிக்குறும்படங்க
சமனிக்குமுறையால்சபையெலாமடங்கக்
கமனிக்குமனுங்கடைக்கண்ணாலடங்கக்
கொட்டிபவுரிக்குங்கோடாங்கிக்குறிமுதல்

பட்டிலாக்குறிகளுங்கட்டினுலடக்கிக்
கொங்கணமாரியந்தெச்சிலாதேசமும்
கொங்கைமாததிரைக்கோலசெங்கோல்நடாத்தி
கன்னடந்தெலுங்குகலிங்கராச்சியமுந்
தென்னவர்தமிழாலசெய்ததம்பநாட்டி
மன்னவர்தமக்குவலதுகைநோக்கி
காலமுனைபோங்குறிகைப்பலனுங்குறி
மேலினிவருங்குறி வண்டுவாமனைக்குறி
மெய்க்குறிகைக்குறிவிழிக்குறிமொழிக்குறி
எக்குறியாயினுமிமைப்பினிலுரைக்கு
மைகருவிழிக்குறவஞ்சிவந்தனளே.

இதுவுமது-விருத்தம்.

சிலைநுதலிற்கஸ்தூரிதிலதமிட்டுநறுங்குழலிற்கெச்சைசூடிக் (தாங்கி
கொலைமாதர்கண்மையெழுதிமாதிரைகம்கால் வாங்கிமணிக்கூடை
முலைமுகத்திற்குன்றிமணிவடம்பூண்டு திரிகூடமுதலவர்சாரல்
மலைதனிற்போனவஞ்சிகுறவஞ்சிபாஞ்சிகொஞ்சிவருகின்றாளே.

தரு-இ-ம்-தோடி-சாப்புதாளம்

பல்லவி.

வஞ்சிவந்தனளே—மலைக்குற-வஞ்சிவந்தனளே.

அநுபல்லவி.

வஞ்சிபெழிலடர்ந்தவரிவிழிநஞ்சிமுழுமறநெஞ்சிபலவினை
வஞ்சிசடைமுடிவிஞ்சையமலனைநெஞ்சினினைவொடுமிஞ்சுகுறிசொல

சரணங்கள்.

௧. வல்லைநிகர்முலையில்லையெனுமிடை வில்லையணிநுதல்முல்லைபெருநகைவல்லியெனவொருகொல்லி மலைகளிலலைவிபலவிலுமெல்லியிவளென ஒல்லிவடகன்டிலவியணாபுகல் புல்லிலவருகுறி சொல்லிமதுரிதநலிபணினைமலைவலவிசூழன மொழிச்செலவியுணாபவர் கல்வி மலைக்குற. (வஞ்சி)

௨. குன்றிலிடுமழைமின்மிகவெள்ளெனநிரைகுன்றிவடமுலைமுங்கவேமன்றல்கமழ்சிறு தென்றல்வருவழி நின்றுதாள மிலங்கவே ஒன்றிவிரதியுமொன்றில்மதனனு மூசலிடுகுழைபொங்கவே எனறுமெழுதிய மன்றில்நடமிடுகின்றசரணினர்வெனறிமலைக்குற. (வஞ்சி)

௩. ஆடுமிருகுழைநீதாடுமொருகுமறகாடுமிணைவழிசாடவே கோடுபொருமுலைமூடுசலவையிறாடுபிதங்கிமலாடவே தோடி முரளிவராளிபயிரவிதோடிபெறவினைபாடியே நீடுமலையிலாடுமலைமதி சூடுமலைதிரிகூட மலைக்குற. (வஞ்சி)

குறத்தியைவர்ணித்தல்.

கொச்சகக்கலிப்பா.

முன்னைக்கிரிவளைத்த முக்கணர்குற்றாலர்வெற்பில்
என்னைக்கரியமுழற் காமக்குறவஞ்சி
பொன்னிலைகுடம்போற் புடைத்தெழுந்தயாரமுலை
பின்னம்பருத்திட்டா லிடைபொறுக்கமாட்டாதே.

தரு-இ-ம-தோடி-ஆதிதாளம்,

பல்லவி,

வஞ்சிவந்தாள்-மலைக்குற--வஞ்சிவந்தாள்

அநுபல்லவி.

வஞ்சிவந்தாள்கிரிகூடரஞ்சிதமோகினிமுன்னே
மிஞ்சியவிரகநோய்ச் சஞ்சீவிமருந்துபோலே (வஞ்சி)

சரணங்கள்.

௧. மும்மையுலகெங்கும்வெல்லக்கொம்மைமுலையார்க்குநல்ல
செம்மையாய்க்குறிகள்சொல்ல ஆம்மேயமமேயென்றுசொல்லவ

௨. சோலையிலவசந்தகாலம்வாலகோகிலம்வந்தாற்போல்
கோலமலைவில்லியார்குற்றால லைமுழங்குற (வஞ்சி)

௩. மாசதிரைக்கோலத்துதன்னைச்சாகதிசகண்பார்வை வபனைத்
தோத்திரவடிவின்னபூத்தமயிர்க்கொடியென்ன (வஞ்சி)

வசந்தவல்லிகுறத்தியைக்கண்டுமலையைவினவுதல்.

ஆசிரியவிருத்தம்.

அந்தரதுந்துமிமுழக்குமன்னர்க்குற்றாலலிங்கரைப்பாடி
வந்தகுறவஞ்சிதன்னைவசந்தவல்லிகண்டுமனமகிழ்ச்சிகொண்டு
சந்தமுலைத்துவளுமிடைத்துவளைக்கைப்பவளவிதழ்நகையலேயுன்
சொந்தமலையெந்தமலையளந்தமலைவளமெனக்குச்சொல்லென்றனே.

குறத்திசொல்லல்.

இ-ம-புன்னாகவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. வானரங்கள்கனிகொடுத்து மந்தியொடுகொஞ்சும்
மந்திசிந்துகனிகளுக்கு வானகவிகள்கொஞ்சும்

௨. கானகர்கள்விழிபெறிந்து வானவரையழைப்பார்
கமனசித்தர்வந்துவந்து காயசித்திவிளைப்பார்

௩. தேனருவித்திரையெழும்பி வானின்வழியொழுகும்
செங்கதிரோன்பரிககாலுந் தேர்க்காலும்வழுக்கும்

௪. கூனலிளம்பிறைமுடித்த வேணியலங்காரர்
கொற்றவர்வாழ்திரிகூட மலையெங்கள்மலையே

௫. முழங்குதிரைப்புனலருவி கழங்கென்முத்தாடும்
முத்தமெங்கும்பார்த்துப்பெண்கள் சிற்றிலைகொண்டாடும்
௬. கிழங்குகிள்ளித்தேனெடுத்து வளம்பாடிநடப்போம்
கிம்புரியின்கொம்பொடித்து வெம்புதினையிடிப்போம்
௭. செழுங்குரங்குதேமாவின் பழங்களைப்பந்தடிக்கும்
தேனலர்சண்பகவாசம் வானுலகம்வெடிக்கும்
௮. வழங்குகொடைமகாராசர் குறும்பலவிலீசர்
வளரும்பெருந்திரிகூட மலையெங்கள்மலையே
௯. ஆடுமாவினமணி கோடிவெயிலெறிக்கும்
அம்புலியைக்கவளமென்று தும்பிவழிமறிக்கும்
௰. வேடுவர்கள்தினைவிதைக்கச் சாடுபுனந்தோறும்
விந்தையகில்குங்குமமுஞ் சந்தனமும்நாறும்
௰௧. காடுதொறுமோடிவரை யாடுகுதிபாயும்
காகமணுகாமலையில் மேகநிரைசாயும்
௰௨ நீடுபலவீசர்கயி லாசகிரிவாசர்
நிலைதங்குந்திரிகூட மலையெங்கள்மலையே
௰௩ கயிலையெனும்வடமலைக்குத் தெற்குமலையம்மே
கனகமகாமேருவென நிற்குமலையம்மே
௰௪ கயிலைமலைதென்மலைக்கு வடக்குமலையம்மே
சகலமலையென்றனக்குள் ளடக்கமலையம்மே
௰௫. வயிரமுடன்மாணிக்கம் விளையுமலையம்மே
வானிரவிமழைகள்தொறு நுழையுமலையம்மே
௰௬. துயிலுமவர்விழிப்பாகி யகிலமெங்குந்தேடும்
துங்கர்திரிகூடமலை யெங்கள்மலையம்மே
௰௭. கொல்லிமலையெனக்கிளைய செல்விமலையம்மே
கொழுநனுக்குக்காணிமலை பழனிமலையம்மே
௰௮. எல்லுலவும்விந்தைமலை யெந்தைமலையம்மே
இமயமலையென்னுடைய தமையன்மலையம்மே
௰௯. சொல்லரியசாமிமலை மாமிமலையம்மே
தோழிமலைநாஞ்சிநாட்டு வேழ்விமலையம்மே
௨௰ சொல்லினங்கள்முழவுகொட்ட மயிலினங்களாடும்
திரிகூடமலையெங்கள் செல்வமலையம்மே
௨௧. ஒருகுலத்திற்பெண்கள்கொடோம் ஒருகுலத்திற்கொள்ளோம்
உறவுபிடித்தாலுவிடோம் குறவர்குலம்நாங்கள்
௨௨. வெருவிவருந்தினைப்புனத்திற் பெருமிருகம்விலக்கி
வேங்கையாய்வெயில்மறைத்த பாங்குதனைக்குறித்தே
௨௩. ஆருளிலஞ்சிவேலர்தமக் கொருபெண்ணைக்கொடுத்தோம்
ஆதினத்துமலைகளெல்லாஞ் சீதனமாய்க்கொடுத்தோம்

உச. பாதிமதிசூழ்மலையைத் தருவனுக்குக்கொடுத்தோம்
பரமர்திரிகூடமலை பழையமலையம்மே

வசந்தவல்லிக்குறத்தியை-நாட்டுவளமும்-நகர்வளமும்-வினவுதல்.

விருத்தம்.

கேட்டுவளமுனுகாட்டுங்கொடியின்வளபிடைகாட்டுங்குறிஞ்சிபூத்த
காட்டுவளங்குழல்காட்டுமலைவளந்தானியுரைத்துக்காட்டுவானேன்
தோட்டுவளம்புரிகாதர்திரிகூடமலைவளருந்தோகையேயுன்
னூட்டுவளமெனக்குரைத்துகுற்றாலத்தலவளமுநவிலுவாயே.

குறத்தி-சொல்லுதல்.

இ-ர-கேதாரகௌளம்-தாளம் சாப்பு

கண்ணிகள்.

க. ராமாங்குயிற்சின்னங்காமத்துரைவந்தான்றுரைவந்தானென்றூர்
ஆராமுலேமின்னூாவாவரல்குற்றேர்களலங்காரஞ்செய்யப்
பாரமாமதிவெண்குடைமிஞ்சப்பாக்குங்கிள்ளைப்பரிகள்மீன்கொஞ்
சத்தேரில்மாரன்வசந்தனுலாவுந்திருக்குற்றாலர்தென்னூரியநாடே

உ. கரைசேர்த்தகுழலார்க்குநாணிக்கடலைச்சேர்ந்தகறுப்பானமேகம்
சேர்ந்தமுலைக்கிணையாகுமலையைச்சேர்ந்துடலையொன்றுவாங்கி
நீரைச்சார்ந்தாரைபம்பெடுபிலக்கொண்டவின்தேரேறிவெய்யோனை
தேரைச்சூழ்ந்திடக்கார்காலமெனவேலுதிருகுற்றாலர்தென்னூரியநாடே

௩. கூழைவாசற்பலாவினிற்பாய்க்கொழும்பலாக்கனிவாழையிற்சாய
வாழைசாய்ந்தொருகாழையிற்றூக்கவருவிருந்துக்குபசரிப்பார்போல்
தாழைசோறிடத்தாழைகுடிக்கத்திடுஞ்சந்திரகூடர்தென்னூரிடே

௪. அன்னலார்மொழிதன்னைப்பழித்தென்றுடவர்மண்ணின்மூடுகரு
ம்பு,துன்னிடமீளாதுமடக்கதயாதோளைவென்றுசுடகமுத்தீபன்று
பின்னுமடங்கவர்மூரலைவென்றுபிரியுங்காலத்திற்பெண்மையைவெல்ல
கன்னலேவேளுக்குவில்லாகவோங்குங்கடவுளாரியநாடெங்களுடே

௫. தக்கபூமிசகுமுன்புள்ளநாடுசகலதேவர்க்குமன்புள்ளநாடு
முக்கண்ணன்விளையடியநாடுமூவர்பாடிபுகழ்ந்திட்டநாடு
திக்கெல்லாம்வளர்ந்தேங்கியநாடுசித்துரோகமுநீங்கியநாடு
மைக்கண்ணாள்குழல்வாய்மொழிபாகர் வசந்தவாரியநாடெங்களுடே

௬. அஞ்சுநாறுமகங்கண்டநாடு அனேகங்கோடியுகங்கண்டநாடு
கஞ்சயோனிபுதிக்கின்றநாடு கமலவாணிதுதிக்கின்றநாடு
செஞ்சொன்மாமுனிவேகியநாடு செங்கண்மால்சிவனாகியநாடு
வஞ்சிபாதத்திரிகூடநாதர்வசந்தவாரியநாடெங்களுடே

எ. மாதமூன்றுமழையுள்ளநாடு வருஷமூன்றுவிளைவுள்ளநாடு
வேதமூன்றும்பலிவுள்ளநாடு விசேஷமூன்றுங்குலாவுள்ளநாடு
போதமூன்றுநவஞ்செய்யுநாடு புவனமூன்றும்வலஞ்செயுநாடு
நாதமூன்றுவானகுற்றாலநாதரியநாடெங்கணுமே.

அ. நீங்கக்காண்பது சேர்ந்தவர்பாவம் நெருங்கக்காண்பது கன்னலிற்
தொங்கெல்-தூங்கக்காண்பதுமாம்பழக்கொத்து-சுழலக்காண்பது தீம்
தயிர்மத்து - வீங்கக்காண்பதுமங்கையர்கொங்கை வெடிக்கக்காண்ப
துசொல்லையின் முல்லை ஏங்கக்காண்பதுமங்கலபேரிகை யீசாரிய நா
டெங்கணுமே.

௯. ஓடக்காண்பது பூம்புனல்வெள்ளம் ஒடுங்கக்காண்பது யோகியருள்
ளம்-வாடக்காண்பதுமின்னார்மருங்குல் வருந்தக்காண்பது சூலுளைச்
சங்கு போடக்காண்பதுபூமியிலழுந்து புலம்பக்காண்பதுகிண்கிணிக்
கொத்துதேடக்காண்பதுநல்லறக்கீர்த்திதிருக்குற்றாலர்தென்னாரியநா
டே.

குறத்தி தலமகிமைசொல்லுதல்.

விருத்தம்.

அரிகூடவயன்கூடமறைகூடஇனந்தேடவரிதாய்நின்ற
திரிகூடப்பதியிருக்குந் திருநாட்டுவளமுரைக்கத்தெவிட்டாதம்மே
கரிகூடப்பிடிதிரியுஞ் சாரலிலேயொருவேடக்கைவில்லேந்தி
நரிகூடக்கலைசென்ற திரிகூடத்தலமகிமைநவிலக்கேளே.

இராகம்-பிலகரி—தாளம்-ஜம்பை.

கண்ணிகள்.

க. ஞானிகளுமறியார்கள்சிகரந்திமூல
நானறிந்தவகைகளிற்சொல்லக்கேளம்மே
மேன்மைபெருந்திரிகூடத்தேகனதுவித்துறைக்கே
மேவுமொருசிவலிங்கத்தேதவரகசியமாய்
ஆனதுரையயனுமுரைத்தானுமறியாமல்
அருந்தவத்துக்காய்த்தேடித்திரிந்தலையுங்காலம்
மேலானவானவர்க்கெங்கள்கானவர்கள்காட்டு
மூதுகங்கைட்டாறுசிவமாதுகங்கையாராமே

உ. சிவமாதுகங்கையின்மகிமைபுவனமெங்கும்புகழும்
செண்பகாடவித்துறையின்பண்புசொல்லக்கேளாய்
தவமுனிவர்கூட்டுறவும்வரிகருங்கிசையுஞ்
சஞ்சீவிமூலானவிந்தைசேர்லிகையும்
கவனசித்தராதியருமௌனயோகியருங்
காதிருக்குங்கபிலாயமேற்றிருக்குமம்மே
நவநிதியும்விளையுமிம்விடமதுகடந்தால்
நங்கைமார்குரவையொலிபொங்குமாகடலே

ரு. பொங்குகடல்திரிவேணிசங்கமெனச்செழிக்கும்
 பொருந்துவசிட்டாநதித்துறையிற்பொன்னுமுத்துங்கொழிக்கும்
கங்கையெனைறவடவருவிதககுந்திரசாபம்
 கலந்தாடக்கழிநீராய்த்தொலைந்தோடும்பாதம்
சங்கைவீதியிற்பறந்துசங்கினங்கள்மேவும்
 தழைத்தமதியிற்சிகரமெங்குந்தொழுதக்கயல்பாயும்
கொங்கலர்செண்பகச்சோலை சூழும்பலவாவீசர்
 குற்றாலத்திரிகூடத்தலமெங்கள்தலமே.

சூ. மன்றுகனில்தெய்வமுற்றென்றுமேன்முழங்கும்
 வளமைபெறுஞ்சதுர்யுகம்மகிலமையெனவழங்கும்
ஈன்றமதகரிபூசையனைறுசெய்ததலமே
 நிந்தசெய்யுட்பதந்தன்வந்தனைசெய்தவமே
பன்றிபொடுவேடன்வலஞ்சென்றதிந்தத்தலமே
 பற்றாகப்பாமருதுறைகுற்றாலத்தலமே
வென்றிபெறுந்தேவர்களுங்குன்றமால்மரமாய்
 மீநகமதாய்த்தவசிருக்கும் பெரியதலமம்மே.

வசந்தவல்லி - கிளைவினவுதல.

விருத்தம்.

தீர்த்தவிசேடமுந்தலத்தின்சிறந்தவிசேடமுமுரைத்தாய்திருக்குற்றால
மூர்த்திவிசேடந்தனையுமொழிதோறு நீயுரைக்குமுறையார்க்கண்டேன்
வார்த்தைவிசேடங்கள்கற்றமலைக்குறவஞ்சிக்கொடியே வருக்கைவாச
கீர்த்திவிசேடமும்பெரிய கிளைவிசேடத்தையுநீகிடர்த்துவாயே.

குறத்தி-சொல்லுதல்.

இ-ம்-முகாரி-ஏகதாளம்.

கண்ணிகள்.

க. குற்றாலக்கிளைகளைதக்கூறக்கேளம்மே
 குலம்பார்க்கிலதேவரிலும்பெரியகுலங்கண்டாய்
பெற்றதாய்தந்தைதனையுற்றுநீகேட்கில்
 பெண்கொடுத்தமலையரசனறனைக்கேட்கவேண்டும்
உற்றதொருபனிமலையின்கொற்றவேந்தனுக்கும்
 உயர்மதுரைமாறனுக்குஞ் செய்மருகர்கண்டாய்
வெற்றிபெறும்பாற்கடலிற் புற்றாவினுறங்கும்
 வித்தகர்க்குக்கண்ணான மைத்துனர்தானம்மே.

உ. ஆனைவாகனத்தார்க்கும்வானுலகிலிருக்கும்
 ஆடுவாகனத்தார்க்குநந்தாகைவாகனற்கும்
தானையாற்றந்தைகாலெறிந்தமகனுற்குந்
 தருகாழிமகனுர்க்குங்கப்பனுமைகண்டாய்
சேனைமகபதிவாசலானைபெறும்பிடிக்குந்
 தேனீன்றமலைச்சாரல்மானீன்றகொடிக்குங்

காணமலர்மேலிருக்குமோனவயனார்க்குங்
காமனார்தமக்குமிவர்மாமனாரம்மே.

ரு. பொன்னுலகிற்றேவருக்குமன்னுலகத்தவர்க்கும்
பூதலத்தின்முனிவருக்கும்பாதலத்துள்ளார்க்கும்
அன்னவடிவெடுத்தவர்க்குமேனவுருவானவற்கும்
அல்லார்க்குமுன்னுதித்தசெல்வர்காணம்மே
முன்னுதித்ததுவந்தவகைத் தமயனைவுரைப்பார்
மொழிந்தாலுமொழியலாம்பழுதில்லைகாணம்மே
நன்னகரிற்குற்றாலநாதர்கிளைவளத்தை
நானுரைப்பதரிதல்குதானுரைக்குமம்மே.

வசந்தவல்லி-வினவுதல.

விருத்தம்.

நீர்வளர்பவளமேனிகிமலர்குற்றாலநாதர்
கூர்வளம்பாடியாடுக்குறவஞ்சிகொடியேகேளாய்
கார்வளர்குழலார்க்கெல்லாங்கருதிநீவிருதாய்ச்சொல்லும்
சீர்வளர்குறியின்மார்க்கந்தெரியவேசெப்புவாயே.

குறத்தி-சொல்லுதல்.

தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

வித்தாரமென்குறியம்மே-மணி.

அநுபல்லவி.

முத்தாரம்பூணிமுகிழ்முலைப்பெண்ணே
வித்தாரமென்குறியம்மே.

சரணங்கள்.

க. வஞ்சிமலைபொடு கொஞ்சி கொங்கு
மக்காரடந்துலுக்கணே மெச்சி
செஞ்சிவடகாசி நீளம் சீன
சிங்களமீழம் கொழும்புவங்காளம்
தஞ்சைசிராப்பள்ளிக் கோட்டை தமிழ்
சங்கமதுரைதென் மங்கப்பேட்டை திசை
மிஞ்சிகுறிசொல்லிப் போராய் திசை
வெகுறுதான்பெற்றவிருதுகள்பாராய் (வித்தார

உ. நக்னகர்க்குற்றாலங்கன்னில் எங்கு
நாட்டுயெண்ணூற்றெண்பத்தோராண்டுதன்னில்
பன்னகமாமுனி போற்றத்த மி
பாண்டியனுமுதற்சித்ரோடுமேய்ந்த
தென்னருஞ்சித்ர சபையை எங்
சின்னணஞ்சாதேவன்செப்போடுமேய்த்த

முன்னாளில்குறி சொல்லிப் பெற்ற
மோகனமாலைபார்மோகன வல்லி (வித்தார)

௩. அன்பாய்வடகுண பாலில் சொல்லத்
தாண்டொருநானூற்றிருபத்து நாலில்
தென்காசியாலய மேகங்கக் குறி
செண்பகமாறர்குச்சொன்னபேர் நாங்கள்
நண்பாண்டியராச்சிய முய்ய சொக்க
நாயகர்வந்துமணக்கோலஞ் செய்ய
இன்பமதுரைமீ னாட்சி அன்று
பெங்களைக்கேட்ட துஞ்சங்கத்தார் சாட்சி (வித்தார)

வசந்தவல்லி-குறிகேட்குதல்.

விருத்தம்.

கலவிக்குவிழிவாள்கொண்டு காமனைச்சிங்கிகொள்வாய்
